அ.வ.எண்: 173/2015 நாள்:05.09.2022

**பி.வா.சா.1. செல்வம் என்கிற சிங்காரவேலு**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாதி சித்ரா என்னுடைய அக்கா என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு தம்பி முறை. என் உடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 7 பேர் ஆவார்கள். என்னுடைய தகப்பானார் இறந்த வருடம் 1987. என்னுடைய அம்மா பெயர் கமலாம்பாள். என் அம்மா பலவருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது அக்கா வாதி சித்ராவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1963 டு 1964 நான் அப்போது 8ஆம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். நான் ரயில்வேயில் போலீசாக பணிபுரிந்தேன். நான் ஓய்வு பெற்றது 31.05.2009 ஆகும். எனது அக்காவின் கணவர் எங்கு பணிபுரிந்தார் என்றால் வங்கியில் சூப்ரவைசராக பணிபுரிந்தார். அவர் எப்போது இறந்து போனார் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சர்வே எண். 7/2 மரூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தானது எப்போது யார் வாங்கியது என்றால் வாதி சித்ரா வாங்கியது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது விற்றவர் வாங்கியவர் யார் என்றால்1ஆம் பிரதிவாதி நாடிமுத்து 3ஆம் பிரதிவாதி சாந்தியிடம் 86 செண்ட் விற்பனை செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் விற்றவர் வாங்கியவர் யார் என்றால் கந்தசாமி விருதளால் என்பவரிடமிருந்து மருவூர் கிராமம் சர்வே எண்.7/2 1.05 ஏக்கர் வாங்கினார். மேற்படி அவர்கள் கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி சித்ரா மேற்படி தாவா சொத்தை யார் பணத்தில் வாங்கினார் என்றால் என்னுடைய அக்கா வீட்டுக்காரர் பணத்தில் தான் வாங்கினார். தாவா சொத்துக்கு வடபுறம் உள்ள 67 செண்ட் என்னுடைய அப்பா வாங்கியது என்றால் சரிதான். என்னுடைய அக்காவின் கணவர் வங்கியில் வேலை பார்த்து வந்த காரணத்தினால் அவரால் தாவா சொத்தின் சாகுபடி எதுவும் செய்ய இயலாமல் இருந்ததாலும் எனது அப்பா வாங்கிய நிலம் என்னுடைய அக்கா வாங்கிய நிலத்திற்கு அருகில் இருந்ததாலும் மேற்படி தாவா சொத்தையும் சேர்த்து சாகுபடி செய்யுமாறு என் தந்தையிடம் என் அக்கா கூறினார் என்றால் ஆமாம் சத்தியமாக அதுதான் உண்மை. எனது அப்பா இறந்த பிறகு மேற்படி இடத்தில் யார் சாகுபடி செய்து

அனுபவித்து வந்தார் என்றால் நான் சாகுபடி செய்து அனுபவித்து வந்தேன் நான் அப்போது பணியில் இருந்ததால் என்னால் அடிக்கடி வந்து சாகுபடி செய்ய இயலாததால் என்னுடைய சகளை ராஜரெத்தினம் என்பவரிடம் மேற்படி நிலத்தை சாகுபடி செய்து பார்த்துக் கொள்ள சொல்லியிருந்தேன்.

வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவையாறு.